சபாபதி சுவாமிகள் மடம்.

*430 வினா—திரு. எஸ். முருகையன் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், போளூர் வட்டம், தென்பள்ளிப்பட்டு, சபாபதி சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏதேனும் விற்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான இந்து சமய அற நிலையத் துறை ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்நிறுவனம் இந்து சமய அற நிலைய சட்டத்தின் கீழ் வராத படியால், அற நிலையத் துறை ஆணையரின் அனுமதி தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவை சார்ஜெண்ட் தனது கடமையைச் செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

Thiru K. T. K. TANGAMANI : Sir, on a point of order. My point of order relates to the maintenance of order in this House.

தாங்கள் ஏற்கெனவே இந்த மன்றத்திலே, மன்றத்தை ஒட்டி இருக்கக் கூடிய இடங்களிலே இம்மாதிரி நிலை இல்லாத முறை இருப்பதற்காக உத்திரவு போட்டிருக்கிறீர்கள். அந்த உத்திரவை அமல் நடத்துவதற்காக நேற்று வாச் அண்ட் வார்ட் சார்ஜண்ட் முயற்சி செய்த போது கல்வியமைச்சர் அவர்களுடைய செக்யூரிட்டி ஆபீசர் என்று சொல்லக்கூடியவர் அதைத் தடுத்தது மட்டுமல்லாமல் ரொம்ப அவமானமும் செய்திருக்கிறார்கள். இதைப் பல உறுப்பினர்கள் பார்த்திருக்கிறார்கள். அதைப் பற்றி தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? தாங்கள் போட்ட உத்திரவை அமல் நடத்த சார்ஜண்டுக்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா? அமைச்சருடைய செக்யூரிட்டி ஆபீசர் சார்ஜண்ட்டை விட இங்கே செல்வாக்கு உள்ளவரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The matter has been brought to the notice of the Secretary and the same is under examination I will let the hon. Member know the result day-after-tomorrow.